மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : STC 140/22

பெயர் : ஜோசப்மோகன்(PW3)

த/பெ. : காணிக்கை மரியான்

கிராமம் :

தாலுகா :

Calling :

(Accused Perumal samy is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the15 th day of February 2024

<u>முதல் விசாரணை</u>

1)நான் புதுப்பச்சேரியில் வசிக்கிறேன். நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். அசா 1 ஆழ்வாரை தெரியாது.அஜர் எதிரியை தெரியும்.

2)தேதி மாதம் நினைவில்லை.4 வருடங்களுக்கு முன்பாக இரவு 8 மணிக்கு புதியம்புத்தூரில் இருந்து புதுப்பச்சேரி செல்லும் ரோட்டில் குளத்தங்கரை அருகில் ஒரு பெரியவர் கீழே விழுந்துகிடந்தார்.நான்கு ஐந்து நபர்கள் அங்கு நின்று கொண்டிருந்தார்கள்.நான் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்தேன்.ஆம்புலன்சு வந்தவுடன் காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன்.சாட்சி ஒருவர் வேண்டுமென்று காவல்நிலையத்தில் இருந்து என்னை கேட்டார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1)வயதான நபர் முடிவெட்டும் வேலை செய்து வந்தார் என்றால் எனக்கு அவரை பற்றி எதுவும் தெரியாது.நான் பார்த்த போது அசா1 க்கு வலது கால் மூட்டு,இடது கால் மூட்டில் காயங்கள் இருந்தது என்றால் இருட்டில் எனக்கு சரியாக தெரியவில்லை.நானும் எதிரியும் உறவினர்கள்.அவருடைய மனைவி என் உறவுமுறை அண்ணன் மகள்.6.10.2019 ஆம் தேதி இரவு 8.30 மணிக்கு மேலமடத்தில் இருந்து புதுப்பச்சேரிக்கு செல்லும் ரோட்டில் கனி நகருக்கும் மேலவீரபாண்டியபுரத்திற்கும் இடையில் எனக்கு நன்கு தெரிந்த அசா1 ஆழ்வார் கிழக்கில் இருந்து மேற்காக நடந்து வரும்போது என்னுடைய உறவினரான எதிரி TN 69 AB 7641 Hero Honda Bike யை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும்

ஓட்டி வந்து அசா1 னின் மீது மோதி அவருக்கு பலத்த காயத்தை ஏற்படுத்தியதை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் சரியல்ல.

2)நான் நேரடியாக பார்த்துவிட்டு தற்பொழுது எதிரியின் உறவினர் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.